***கவனிக்க.-*** *2017.06.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2023 - 2017 ජූනි මස 09 වැනි සිකුරාදා - 2017.06.09**

*2023 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 98 |


***கவனிக்க.-*** (i) *உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் 2017, யூன் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *லைலா உம்மா தீன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, யூன் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2017, யூன் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, யூன் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால்மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*


*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## வர்த்தக மேல் நீதிமன்றம் - மேல் மாகாணம்
## (கொழும்பில் அதன் நியாயாதிக்கத்தை பிரயோகிக்கையில்)

வழக்கு இலக்கம் HC/சிவில் 18/2017CO
தன்மை - கம்பனிகள்
பெறுமதி - ரூபா 151,129,655. 85
நடைமுறை - சுருக்கெழுத்து

கொழும்பு 04, மெல்போன் அவனியு, இல. 27இல் மட்டுப்படுத்தப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி சம்பந்தமாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் கீழ் நீதிமன்றத்தின் மூலம் கணக்கை தொகுத்து செலுத்தி முடிவிடுவதற்காக கேள்வி மனு சம்பந்தமான விடயத்தில். கொழும்பு 10, ரீ. பீ. ஜாயா மாவத்தை, இலக்கம் 481 என்னும் விலாசத்தில் பதிவுசெய்யப்பட்ட காரியாலயத்தில் அமைந்துள்ள மட்டுப்படுத்தப்பட்ட கல்ஓயா பிளான்டேசன்ஸ் (தனியார்) ஹிங்குரான, அம்பாறை.

முறைப்பாட்டாளர்கள்.

மேல் குறிப்பிட்டுள்ள கம்பனி வர்த்தக மேல் நீதிமன்றின் மூலம் கணக்குகளை முடிவு செய்து மூடுவதற்கான மனுவொன்று கொழும்பு 10, ரீ. பீ. ஜாயா மாவத்தை, இலக்கம் 481 என்னும் விலாசத்தில் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் அமைந்துள்ள அம்பாறை மட்டுப்படுத்தப்பட்டுள்ள ஹிங்குரான, கலஓயா பிளான்டேசன்ஸ் (தனியார்) கம்பனி மூலம் 2017ஆம் ஆண்டு மே மாதம் 08ஆந் திகதி வார்த்தக மேல் நீதிமன்றத்தில் மனு செய்திருப்பதாகவும் அந்த மனுவை 2017ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01ஆந் திகதி நீதிமன்றின் முன்னிலையில் விசாரணை செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளதாகவும் அந்த மனுவுக்கான கட்டளையை இடுவதற்கு சாதகமாகவோ பாதகமாகவோ காரணங்களை முன்வைக்க கரிசனையுள்ள அக்கம்பனியின் கடன் கொடுத்தவர்கள்அல்லது ஏற்புடையோர் இருப்பின் அதற்காக தாமாகவே அல்லது தமது நிதி ஆலோசனை வழங்குவோர் அல்லது நியாயவாதிகள் மூலம் அந்த விசாரணை நடைபெறும் போது தோன்ற முடியும் என்றும் அந்த மனுவின் பிரதியை பெற்றுக்கொள்வதற்காக குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்தி அதன் பிரதியை தேவைப்படும் அந்த கம்பனி ஏதும் கடன் கொடுத்தவர் அல்லது ஏற்புடையவருக்கு கீழ் கையொப்பம் இடுபவர் மூலம் கொடுக்கப்படும் என இத்தால் அறியத்தருகிறோம்.

கையொப்பம் :- பூர்ணிமா ஞானசேகர,
இல. 17, இரண்டாம் மாடி,
பெல்மன்ட் வீதி,
கொழும்பு 12.

**குறிப்பு** .- இந்த மனுவை விசாரணை செய்யும் வேளையில் தோற்றுவதற்கு விரும்பும் யாரும் அப்படி செய்ய தான் எண்ணியிருப்பதாக எழுத்துமூல அறிவித்தல் மேல் குறிப்பிட்டுள்ள பூர்ணிமா ஞானசேகரவிடம் ஒப்படைக்க வேண்டும் அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். அந்த அறிவித்தலில் அவரின் பெயர், விலாசம் அல்லது வியாபார நிறுவனமாயின் அந்த வியாபார நிறுவனத்தின் மூலம் அல்லது அவர்களின் நியாயவாதி இருந்தால் அவர் மூலம் கையொப்பமிட்டு மேல் குறிப்பிட்டுள்ளவருக்கு 2017, யூலை மாதம் 31ஆந் திகதி காலை 6.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும் அல்லது தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

பூர்ணிமா ஞானசேகர,
இல. 17, இரண்டாம் மாடி,
பெல்மன்ட் வீதி,
கொழும்பு 12.

6-408